பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 23 வியாழக்கிழமை 08.08.2024 கதிர் 274

# வடக்கு கிழக்கில் சீன இராணுவம்

## செல்வம் எம்.பி. நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு
## அதற்கு ஆளும்தரப்பு அனுமதியா என்றும் கேள்வி



வடக்கு மற்றும் கிழக்கில் சீன இராணுவத்தை நிலைநிறுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் சீனா காலூன்ற ஒருபோதும் இடமளிக்க முடியாது. சீன இராணுவத்தின் வருகையை அரசாங்கம் அனுமதிக்கிறதா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 'அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை' தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றினார் செல்வம் அடைக்கலநாதன். அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

மன்னார் வைத்தியசாலையில் மதியராஜன் சிந்துஜா இறப்பு தொடர்பில் வைத்தியசாலைக்கு சென்று வைத்தியர்களிடம் பேசியபோது விசாரணைகளை முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிட்டார். இந்த விசாரணை கண்துடைப்பாக, குற்றவாளிகளை இடம்மாற்றும் விசாரணையாக இருக்கக்கூடாது. நீதியான விசாரணையின் ஊடாக சம்பந்தப்பட்டவர்கள் 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் பொது வேட்பாளர் இன்று அறிவிக்கப்படுவார் என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்றுத் தெரிவித்தார். வேட்பாளருக்கான பட்டியலில் கடைசியாக இருவரது பெயர்கள் பரிசீலனையில் உள்ளன என்பதையும் அவர் வெளிப்படுத்தினார். கிழக்கிலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் மற்றும் கொழும்பிலிருந்து சட்டத்தரணி தவராசா ஆகியோரின் பெயர்களையே அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் அரியநேந்திரனே 2

## இன்று முதல் இழுத்து மூடப்படும் நல்லூர்க் கந்தன் சுற்று வீதிகள்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இன்று காலையில் இருந்து ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதிகள் அனைத்தும் இழுத்து மூடப்படுகின்றன. திருவிழா நடைபெறும் 25 நாட்களும் இந்த வீதிகள் ஊடாக இரவு பகலாக வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருக்கும்.

செப்டம்பர் 4 மாலை ஆலயத்தின் வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே வீதிகள் இனி மீண்டும் திறந்து விடப்படும். வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ் மாநகர சபை அலுவலகத்துக்கு முன்பாக உள்ள வீதியால் திரும்பிப் யாழ். நகர் நோக்கிச் செல்ல முடியும். இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின் போது முத்திரைச் சந்தியூடாகத் திரும்பி கச்சேரி - நல்லூர் வீதி ஊடாகவே நகரை நோக்கிப் பயணிக்க முடியும்.

கோயிலைச் சுற்றி செட்டியார் வீதி, கோயில் வீதி, பருத்தித்துறை வீதி ஆகியவற்றில் வீதித் தடைகளை அமைப்பது தொடர்பாக யாழ். மாநகர ஆணையாளர் என்.கிருஷ்ணேந்திரன், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.



## நெல்லியடி, கரணவாய் பகுதிகளில் 2 வீடுகளின் மதில்கள் இடித்தழிப்பு

### கரவெட்டிப் பிரதேச சபையினர் நடவடிக்கை

பிரதேச சபையின் அனுமதியின்றிக் கட்டப்பட்ட இரு வீடுகளின் மதில்கள் நேற்று இடித்து அழிக்கப்பட்டன. சபை அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் மேற்பார்வையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச சபைக்கு உட்பட்ட நெல்லியடி மற்றும் கரணவாய் வடக்கு ஆகிய இடங்களில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் மதில்கள் இடித்து அழிக்கப்பட்டன என்று 2

### பெயர்தான் அப்படியே தவிர

## ராஜபக்சக்கள் குடும்பத்துடன் எனக்கு தொடர்பு ஏதுமில்லை

### முன்னாள் நீதியமைச்சர் யாழ்ப்பாணத்தில் பரப்புரை



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச நேற்று கோண்டாவிலில் தனது பரப்புரைக் கூட்டத்தை நடத்தினார். அங்கு உரையாற்றிய அவர், தனது பெயரில் ராஜபக்ச என்று இருக்கின்றபோதும் தனக்கும் ராஜபக்சக்கள் குடும்பத்தினருக்கும் இடையில் எந்தத் தொடர்பும் கிடையாது என்று தெரிவித்தார்.

யாழ். நகரிலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கோண்டாவில் பகுதியில் பி.சி.எஸ். மண்டபத்தில் நேற்று விஜயதாச ராஜபக்சவின் ஜனாதிபதி வேட்பாளர் அறிமுகக் கூட்டம் சிறிய எண்ணிக்கையான மக்களுடன் இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய முன்னாள் நீதி அமைச்சர் தெரிவித்ததாவது:

பொதுஜன பெரமுன கட்சியினர் என்னை தமது கட்சி சார்பில் வேட்பாளராக போட்டியிட அனுகியிருந்தனர். நான் அதற்கு மறுத்து விட்டேன். தற்போது 2

### பிணையில் விடுவிக்கப்பட்ட

## மருத்துவர் அர்ச்சுனாவிற்கு மன்னாரில் பெரு வரவேற்பு

### மாலை மரியாதைகளுடன் மக்கள் --தூக்கி வைத்துக் கொண்டாட்டம்



மன்னார் பொது வைத்திய சாலையினுள் பணியாளர்களுக்கு இடையூறு விளைவித்து அச்சுறுத்தினார் என்கிற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மருத்துவர் அர்சுனா இராமநாதன் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார். சிறையிலிருந்து வெளியேறிய அவருக்கு மாலைமரியாதைகளுடன் மக்கள் வர வேற்பளித்தனர்.

மருத்துவர் அர்ச்சுனா தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் செல்வதற்கு நீதிவான் அனுமதி வழங்கினார்.

பிணையில் வெளியே வந்த மருத்துவருக்கு மாலை மரியாதைகளுடன் அங்கு கூடியிருந்த பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வரவேற்பளித்தனர். அவரைத் தங்கள் தோள்களில் தூக்கிக் கொண்டாடினர்.

மன்னார் - தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த பட்ட தாரியான இளம் தாயாரான மரியராஜ் சிந்துஜா (வயது 27) ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். உரிய நேரத்தில் மருத்துவர்கள் அவருக்குச் சிகிச்சை அளிக்கத் தவறியதே அவரது இறப்புக்குக் காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பில் நடத்தப்பட்ட 2

## ஜனாதிபதி தேர்தலுக்காக இதுவரை 22 பேர் கட்டுப்பணம் செலுத்தினர்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட நேற்று வரை 22 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 11 வேட்பாளர்களும், வேறு அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 1 வேட்பாளரும், சுயேச்சையாகப் போட்டியிட 10 வேட்பாளர்களும் இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்துவதற்கான அவகாசம் ஒகஸ்ட் 14 வரை வழங்கப்படும். ஒகஸ்ட் 15காலை 9 மணி முதல் 11.30 மணிவரையான காலப்பகுதியில் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை 2

## கௌதாரிமுனை கிராமம் அழிந்துபோகும் அபாயம்

### சிறிதரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொன்னாவெளி, கௌதாரிமுனை கிராமமும் அழிவடைந்து, இலங்கையின் வரைபடத்தில் இருந்து இல்லாமல் போகும் அபாயம் காணப்படுகிறது என்று யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார். இந்தப் பேரழிவைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் 2

## ஐக்கிய மக்கள் கூட்டணி உதயமாகின்றது இன்று

சஜித் பிரேமதாஸ தலைமையில் அமைக்கப்படவுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணிக்கான ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்படவுள்ளது. கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் காலை 9 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெறுகின்றது.

அதற்கமைய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, பிரபா கணேசன் தலைமையிலான மனித நேய மக்கள் கூட்டணி, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்ரஸ், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தயாசிறி ஜயசேகர தரப்பு உள்ளிட்ட முக்கிய கட்சிகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளன.

ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்ரஸ் இதற்கு முந்தைய தேர்தல்களில் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்தே செயற்பட்டது. எனினும் இம்முறை அக்கட்சி அவ்வாறானதொரு தீர்மானத்தை இன்னும் அறிவிக்கவில்லை. அடுத்த வாரமே தாம் யாருக்கு ஆதரவு என்பதை அறிவிக்கவுள்ளதாக அதன் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கட்சிகள் தவிர பல சிவில் அமைப்புக்களும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இன்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு கைகோர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட நாட்களாக பல்வேறு தரப்பினருடன் முன்னெடுக்கப்பட்டு வந்த பேச்சுக்களின் அடிப்படையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய இவ் ஒப்பந்தம் இன்றைய தினம் கையெழுத்திடப்படுகின்றது.

## இனி இது .....

இறுதித் தெரிவு என்று அறிய முடிகின்றது. இதற்காக அவர் நேற்றே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்திருந்தார். அவரை வேட்பாளராக நிறுத்துவதற்கு முன்பாக அவருடன் நேரில் பேசி அவரது சம்மதம் மற்றும் கட்சியில் அவருடைய நிலைப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம் என்று தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் உயர் பீடம் கடந்த கூட்டத்திலேயே தெரிவித்திருந்தது. அதற்கு வசதியாக அரியநேந்திரன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார் என்று தெரிகின்றது.

அவர் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது நிபந்தனைகள் தளர்த்தப்படும் என்பதை சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்றுக் கோடிகாட்டினார். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக நிறுத்தப்படும் நபர் ஒரு அடையாளக் குறியீடே தவிர, அவர் அதன் பின்னர் அரசியல் செய்யக்கூடாது, பொது வேட்பாளர் என்கிற தனது நிலைப்பாட்டை அரசியல் ஆதாயமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது என்று தமிழ் மக்கள் பொதுச் சபை நிபந்தனை வைத்திருந்தது. அரியநேந்திரனோ ஏற்கனவே அரசியலில் இருப்பவர். இரண்டு தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். இன்னும் சில தடவைகளுக்காவது நாடாளுமன்ற உறுப்பினராக வேண்டும் எண்கிற விருப்பத்தோடு இருப்பவர். எனவே பொதுச் சபையின் நிபந்தனை தளர்த்தப்பட்டு தான் தொடர்ந்தும் அரசியலில் செயற்பட அனுமதிக்கப்பட்டால் மட்டுமே பொது வேட்பாளராக நிற்பேன் சாத்தியம் என்று அரியநேந்திரன் தெரிவித்திருந்தார்.

இது குறித்து செய்தியாளர்கள் நேற்றுக் கேள்வி எழுப்பியபோது நிபந்தனைகள் விதிக்கப்பட்டாலும் தேவைக்கேற்ப அவை தளர்த்தப்படுவது வழமையானதுதானே என்று பதிலளித்தார் சுரேஸ் பிரேமச்சந்திரன். ஒ-ரவேளை அப்படி அரியநேந்திரனுக்காக விதிகள் தளர்த்தப்படுமாக இருந்தால் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கு அதுவே முதலும் கடைசியுமான அரசியல் தோல்வியாக இருக்கும். தமிழ் மக்கள் பொதுச் சபை தொடக்கத்திலேயே தனது நிபந்தனையைக் கைவிடத் தயாராவது அரசியல் கட்சிகளைவிட அதனை மிகக் கேவலமான நிலையில் கொண்டு சென்று நிறுத்தும். அரசியல் கட்சிகளை வழிப்படுத்தி தமிழ் தேசத்தை கட்டியெழுப்ப என்ற குரலுடன் வந்தவர்கள் இதன் மூலம் இத்துபோன தமிழ் அரசியல் செல்நெறியின் பின்னால் இழுபடும் கையாலாகாதவர்களாக வரலாற்றில் இடம்பிடிப்பார்கள்.

சாத்தியமானவற்றை மட்டும் சாத்தியமாக்கும், எதிர்வினையாற்றும் அரசியலுக்கு மாற்றாக முன்னோக்கி நகரும் புரோகிரஸிவ் அரசிலை முன்னெடுப்போம் என்று கூறியவர்களால், ஒரு பொது வேட்பாளரைத் தெரிவு செய்யமுடியாமல் அரசியல்வாதிகளிடம் தமது நிபந்தனைகளைக்கூடக் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை என்றால் அதன் பின்னர் அந்த அமைப்பின் தேவை என்ன என்பதே கேள்விக்குறிதான்.

சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசும்போது மற்றொரு விடயத்தையும் குறிப்பிடத் தவறவில்லை. தமிழ் அரசுக் கட்சி தமிழ் பொது வேட்பாளர் குறித்து எந்த முடிவையும் எடுக்கவில்லை என்றாலும், அரியநேந்திரனோ தவராசாவோ பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டால் அதனைக் கட்சி எதிர்க்காது என்று அவர்கள் கருதுகின்றார்கள் என்றும் அப்படி இல்லையென்றால்கூட அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராகவே இருக்கின்றார்கள் என்றும் சுரேஸ் தெரிவித்தார். ஆக மொத்தத்தில் அரியநேந்திரன் வேட்பாளரானால் கட்சிக்குள் அவருக்கு ஆப்பு தயாராக இருக்கும் என்பது நிச்சயம். பொது வேட்பாளரை தமிழ் அரசுக் கட்சி எதிர்க்காவிட்டாலும்கூட கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஒருவர் கட்சியை மீறி கட்சிக்கு எதிரான கூட்டணியோடு சேர்ந்துகொண்டு அரசியல் செய்வதை அது ஒரு போதும் அனுமதிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படி நடந்தால் தமிழ் அரசுக் கட்சியும் கையாலாகாதது என்கிற விமர்சனத்தை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுவிடும்.

இடிமின்னல்

## ராஜபக்சக்க....

இளம் அரசியல்வாதியொருவரை வேட்பாளராக களம் இறக்கியுள்ளனர். சிறீ லங்கா சுதந்திர கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதே எனது இலக்காக இருந்தது.

எனது பெயரிலும் ராஜபக்ச உள்ளமையால் நான் முந்தைய ஆளும் தரப்பைச் சேர்ந்த ராஜபக்சக்களின் குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்லன். அந்த ராஜபக்சக்கள் குடும்பத்திற்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

நாட்டு மக்களுக்கும் இந்த ஆளும் தரப்புடன் தொடர்புடையவனாகவே என்னைத் தெரியும். ஆனால் நான் நீதியமைச்சராக சுயாதீனமாகவே இயங்கினேன். தற்போதுள்ள ஆளும்தரப்பின் மீது மக்கள் முற்றிலும் நம்பிக்கை இழந்துள்ளமையை நான் அறிவேன். அதனால் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் தற்போது நாடாளுமன்ற இருக்கின்றவர்களில் 150க்கும் மேற்பட்டவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள்.

அதேவேளை, வடக்கு கிழக்கில் அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்ட நிதிகளில் 50 வீதத்திற்கும் அதிகமான நிதி திரும்புகிறது. வடக்கு, கிழக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லாமையே அதற்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

## நெல்லியடி.....

அதிகாரிகள் தெரிவித்தனர். பிரதேசசபையின் அனுமதிபெறாது மதில் அமைக்கும் பணிகளை நிறுத்தும்படி வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை காணி வீட்டு உரிமையாளர்கள் உதாசீனம் செய்ததை அடுத்து அவற்றை இடித்து அழிக்கவேண்டி ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கரணவாய் வடக்கு நவிண்டில் பிரதேசத்தில் உள்ள வீட்டின் மதிலொன்றும் நெல்லியடி நகர பஸ் தரிப்பிடத்தின் பின்னால் உள்ள வீடொன்றின் மதிலுமே இவ்வாறு இடித்து அகற்றப்பட்டன.

கரவெட்டி பிரதேச சபைக்குரிய பகுதிகளில் சமீப காலமாக அனுமதி பெறாமல் கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாகப் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதனை அடுத்தே அனுமதி பெறாது அமைக்கப்பட்ட இரு மதில்களை அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் பிரதேச சபையினரால் கடந்த ஒரு வருடமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு நேரடியாக அறிவுறுத்தல்கள் உதாசீனப்படுத்தப்பட்டு வந்த நிலையில் போக்குவரத்திற்கு இடையூறுஏற்படுத்தும் வகையிலும் பொது வீதிகளோரமாக அமைக்கப்பட்ட இந்த இரு மதில்களும் அகற்றப்பட்டன என்று அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## ஜனாதிபதி தேர்தல்....

சமர்ப்பிக்கும் கால அவகாசம் நாளையுடன் முடிவடையவுள்ளது.

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடுவதற்கு ஒசல ஹேரத்தும் ,லங்கை தொழிலாளர் கட்சி சார்பில் ஏ.எஸ்பி.லியகேவும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாசவும், தேசிய அபிவிருத்தி முன்னணி சார்பில் எஸ்.கே.பண்டாரநாயக்கவும், தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் விஜயதாஸ ராஜபக்ஷவும், ஐக்கிய சோஷலிச கட்சி சார்பில் சிறிதுங்க ஜயசூரியவும், புதிய சீஹல உருமய கட்சி சார்பில் சரத் மனமேந்திரவும், ஜனசேனா முன்னணி சார்பில் பத்தரமுல்லே சீலரத்ன தேரரும், அருனலு மக்கள் முன்னணியின் சார்பில் கே.ஆர். கிறிஷானும்,தேசிய மக்கள் சக்தி சார்பில் அனுரகுமார திஸ ாநாயக்கவும்,சோசலிச சமத்துவ கட்சி சார்பில் பானி விஜேசிறிவர்தன ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அதேவேளை அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி என்ற பிரிவில் று/ஹறு மக்கள் முன்னணி சார்பில் அஜந்த த சொய்சா கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

சுயேச்சையாக போட்டியிடும் வேட்பாளர்களாக ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்தி ரத்ன,

கே.கே.பியதாஸ, ஆனந்த குலரத்ன, அக்மீமன தயாரத்ன தேரர், சிறிபால அமரசிங்க, சரத் பொன்சேகா, அன்டனி விக்டர் பெரேரா, ஐதுருஸ் முஹம்மது ,ல்யாஸ், மானகே பேமசிறி ஆகியோர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

## கௌதாரிமுனை....

எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவின் கேரள மாநிலத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் வாழ்ந்த வயநாடு தற்போது காணாமல் போயுள்ளது. 500க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்களைக் காணவில்லை. ஒரே இரவில் நடந்த அனர்த்தத்தில் ஒரு ஊரே காணாமல் போயுள்ளது. ஊரை காணவில்லை, இங்கிருந்த மக்களை காணவில்லை என கதறி அழுதார்கள் , இணையத்தளங்களில் பார்த்தேன். மனிதனின் கண்டுபிடிப்புகள் இங்கே தோற்றுப்போயுள்ளன.

இயற்கை பேரழிவுக்கு முன்னால் மனிதன் மண்டியிட்டு கிடக்கின்றான் என்பதையே இந்த சம்பவம் எமக்கு பாடமாக காட்டியுள்ளது. சாதி மதம் இன்றி, ஊர் கடந்து எந்த வேறுபாடுகளும் இன்றி உதவுகின்ற மக்களை பார்க்கின்றோம். முண்டக்கை,சூரல்மலை உள்ளிட்ட சில கிராமங்களையும் காணவில்லை. தாயை காணவில்லை, தந்தையை காணவில்லை என்று பிள்ளைகள் கதறுவதை பார்க்கும் போது மனம் வெதும்பியது.

இது இயற்கை பேரிடராகும். இந்த நிலைமைகளை பார்க்கும் போது 2008 மற்றும் 2009 காலப்பகுதியில் எமது மக்கள் முள்ளிவாய்க்காலுக்கு சென்ற போது நேர்ந்தவையே எனக்கு நினைவுக்கு வந்தன. வயநாடு நிலைமை இயற்கையானது. ஆனால் இங்கே நடந்தது செயற்கையானது.

மிகப்பெரிய மனித பேரவலத்தை சந்தித்தவர்களாக ஈழத் தமிழர்கள் உள்ளனர். தொடர்ந்தும் இந்த நாட்டில் நடக்கும் விடயங்களை கூறாமல் இருக்க முடியாது. தீர்வு காண்போம், ஒற்றுமையாக இருப்போம் என்றெல்லாம் வெறும் வாய் பேச்சாகவே கூறுகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி பூனகரி பிரதேச செயலாளர் பிரிவில் பொன்னாவெலியில் உள்ள முருங்கை கற்களை தோண்டியெடுக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. தமிழ் அமைச்சர் ஒருவர் அந்தக் கற்களை தோண்டியெடுப்பதில் கவனமாக இருக்கின்றார். இயற்கையின் அனர்த்தம் ஆரம்பிக்கின்றது.

கேரளா வயநாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்தை செயற்கையாக செய்வதற்கு இந்த அமைச்சரும் அரசாங்கமும் பொன்னாவெளி கிராமத்தில் காத்திருக்கின்றனர். அதனை அண்மித்த கிராமங்களில் உள்ள மக்கள் அந்த முருங்கைக் கற்களை பாதுகாப்பதற்காக போராடுகின்றனர். ஒரு வருடம் கடந்தும் அது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

அதேவேளை கௌதாரி முனையில் மக்கள் 6 வருடங்களுக்கு முன்னர் மக்கள் போராடினர். மண் மேடுகளை அள்ள வேண்டாம் என்றும் கோரினர். அந்த பிரதேசத்தை வரைபடத்தில் இருந்தே இல்லாமல் போகுமளவுக்கு நீதித்துறையே அனுமதி வழங்கியுள்ளதென்றால் நீதி தராசு எங்குள்ளது என்பதை புரிந்துகொள்ளலாம். இயற்கையை காப்பாற்ற மக்கள் போராடினர்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பொன்னாவெளி கிராமமும் மற்றும் கௌதாரிமுனை கிராமமும் இலங்கையின் வரைபடத்தில் இருந்தே காணாமல் போகப் போகின்றது. இந்த இரண்டு கிராமங்களையும் காப்பாற்ற வேண்டும். அங்குள்ள இயற்கைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கேயும் ஒரு வயநாடு உருவாகி விடக்கூடாது என்று உயரிய சபையில் வலியுறுத்துகின்றேன் என்றார்.

## வடக்கு.....

பணிநீக்கம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படவும் வேண்டும். இதேவேளை 9 வைத தியர்கள் எங்களின் வைத்திய சாலைக்கு வரவுள்ளனர். அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வேண்டும். இல்லையென்றால் அவர்கள் வைத்தியசாலைக்கு வருவது கடினமானதாக இருக்கும்.

இந்திய டோலர் படகுகளின் வருகைகளால் எமது மீனவர்கள் கடந்த பல தசாப்தங்களாக துன்பங்களை எதிர் நோக்குகின்றனர். இந்தியாவில் இருந்து நூற்றுக்கணக்கான இழுவை மடிப் படகுகள் வருவதால் எமது மீனவர்கள் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். நியாயமான முறையில் எமது மீனவர்களின் துன்பங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். மீனவர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

எமது மீனவர்களின் வாழ்வாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த விடயத்தில் தமிழ்நாட்டு அரசு நியாயமான தீர்வை பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதுடன் அதற்கு அவர்கள் உரிய ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும். இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் அவர்களின் மீனவர்களை ஆழ்கடல் மீன்பிடி துறையில் ஊக்கப்படுத்தி எமது மீனவர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

எமது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை தட்டிக் கேட்கும் நாடாக இந்தியாவை நாங்கள் கருதுகின்றோம். இதனால் எமது நம்பிக்கையின் படி மீனவர் விடயத்தில் நியாயமான தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்நிலையில் சீனா எமது மீனவர்களை தம்வசப்படுத்த பல யுக்திகளை கையாளுகின்றது. இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அத்துடன் சீன இராணுவம் எமது தேசத்துக்கு வரவுள்ளதாக செய்திகளும் வருகின்றன. ஏற்கனவே வடக்கு மற்றும் கிழக்கில் மக்கள் இராணுவத்தினரால் பட்ட அனுபவங்கள் உள்ளன. அத்துடன் துப்பாக்கி சத்தங்கள் இல்லாவிட்டாலும் போர் சூழலில் இருப்பதை போன்றே மக்கள் இருக்கின்றனர். எமது வரலாற்றை சிதைக்க வேண்டும் என்ற வகையில் நடவடிக்கை எடுப்பதை போன்று தெரிகிறது.

அரசின் முப்படையினரின் ஆக்கிரமிப்புடன் உள்ள வடக்கு, கிழக்கில் புதிதாக சீன இராணுவம் வருவது எதற்கு? இதனை ஆளும்தரப்பு அனுமதிக்கின்றதா? இந்த விடயத்தை நாங்கள் எதிர்ப்பதுடன், இதனை ஒருபோதும் அனுமதிக்கவும் மாட்டோம். எமது மீனவர்களை சீனா தன்வசப்படுத்தும் முயற்சிகளையும் ஏற்க முடியாது.

இதேவேளை வன்னி மாவட்டத்தில் குறிப்பாக வவுனியா மாவட்டம் படுகொலைகள் நிறைந்த மாவட்டமாக மாற்றமடைந்துள்ளது. அண்மையில் ஆசிரியர் ஒருவர் கொலை செய்யப்பட்டு கிணற்றில் போடப்பட்டிருந்தார். பொலிஸாரும், புலனாய்வுத் துறையினரும் என்ன செய்கின்றனர்? வன்னி மாவட்டத்தில் பொலிஸாரின் நடவடிக்கை முறையாக இல்லை.

இங்கு நடக்கும் அநீதிகளை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களின் பிரச்சினைகளை கவனத்தில்கொள்ளவேண்டும். அத்துடன் மன்னாரில் எல்.ஆர்.சி. காணிகள் வெளி மாவட்டத்தவர்களுக்கு வழங்கப்படுகின்றது. மன்னார் மாவட்ட மக்களுக்கு இந்த காணிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார்.

## மருத்துவர்...

தொடக்க கட்ட விசாரணையில் இந்த விவகாரத்தில் தவறு இடம்பெற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

-ஜூலை 28 சிந்துஜா உயிரிழந்தார்.

அவரது இழப்பால் எழுந்த கொந்தளிப்பான நிலையைத் தொடர்ந்து மன்னார் பொது வைத்தியசாலைக்குச் சென்ற மருத்துவர் அர்ச்சுனா, அங்கு கடமையில் இருந்தவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தி அச்சுறுத்தினார் என்று வைத்தியசாலை நிர்வாகத்தால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனை அடுத்து அவரைக் கைது செய்த பொலிஸார் நீதிவான் முன் நிறுத்தினர். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். அவரைப் பிணையில் விடுவிக்க நகர்த்தல் பத்திரம் மூலம் முதல் தடவை எடுக்கப்பட்ட முயற்சி நிராகரிக்கப்பட்டது. அதை அடுத்து நேற்று இரண்டாவது தடவையாக நகர்த்தல் பத்திரம் மூலம் வழக்கு எடுக்கப்பட்டு அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# திருமலை மக்கள் சேவை மன்றத்தினால் நிரந்தர வீடுகள் வழங்கி வைக்கப்பட்டன





(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வீட்டுத் தேவையை பூர்த்திசெய்யும் நோக்குடன் நிரந்தர வீடுகள் நிர்மாணித்து அவை பயனாளிகளின் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை மன்றத்தின் தலைவர் எம். ரீ. ஏம். பாரிஸ் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த யுத்தம் மற்றும் தற்போதைய பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு மிக நீண்டகாலம் நிரந்தர வீடுகள் இன்றி கஸ்டப்படும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 25 வீடுகள் நிர்மாணிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பெல்ஜிய நாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனமான செலவிப் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வாழ்வதற்கான இல்லறம் செயற்றிட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஆறு பயனாளிகளுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் விளாங்குளம், இலுப்பைக்குளம், சல்லி மற்றும் ஆத்திமோட்டை ஆகிய கிராமங்களில் உள்ள பயனாளிகளுக்கு குறித்த வீடுகள் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# ஒன்றரை மாத குழந்தை சாவு வழக்கில். தாய்க்கு கமறியல்

யாழ்ப்பாணம் அளவெட்டி பகுதியில் ஒன்றரை மாத குழந்தை உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தாயை 07 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை தாய்ப்பால் அருந்திய பின்னர் குழந்தை அசைவின்றி காணப்பட்டதால் அளவெட்டி வைத்தியசாலையில் குழந்தை சேர்க்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அங்கிருந்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு குழந்தை மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது.

குழந்தையின் உடலில் காயங்கள் காணப்பட்டமையால் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

உடற்கூற்று பரிசோதனையின் போது குழந்தையின் கைகள், கால்களின் எலும்புகளில் முறிவுகள், தலையில் பலமாக தாக்கப்பட்ட காயங்கள், கண்டல் காயங்கள் போன்றவை கண்டறியப்பட்ட நிலையில், குழந்தையின் மரணம் இயற்கை மரணம் அல்ல என அறிக்கையிடப்பட்டது.

அதனையடுத்து குழந்தையின் தாயாரை கைது செய்த பொலிஸார், தாயாரிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குழந்தை பால் குடிக்க மறுத்தமையால், அதன் கைகள், கால்களை திருகியதாகவும், தொடர்ந்து அழுதுகொண்டிருந்ததால், தலையை சுவரில் மோதியதாகவும் குழந்தையின் கால்களை தான் ஏறி மிதித்ததாகவும், காதுக்குள் பிரம்பை விட்டு குத்தியதாகவும் விசாரணையின்போது குழந்தையின் தாய் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் பின்னர் குழந்தையின் தாயை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியவேளை, அவரை 07 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கவும் தாயை மனநல மருத்துவரிடம் முற்படுத்தி, மருத்துவ அறிக்கையை பெற்று மன்றில் சமர்ப்பிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)

# இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் இலங்கையில் ஆசிரியருக்கு பயிற்சி





இந்திய வம்சாவளி தமிழ் சமூகம் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் இந்திய அரசாங்கத்தின் 750 மில்லியன் ஷரூபா நிதி உதவியின் கீழ் பௌதிகவியல், இரசாயனவியல் கணிதம், ஆங்கிலம் மற்றும் உயிரியல் ஆசிரியர் பயிற்சித் திட்டம் தற்போது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற விழாவின் போது ஆரம்பிக்கப்பட்டது.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின், துணைத் தூதுவர் சத்யஞ்சல் பாண்டே, கல்வி அமைச்சு , நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு ,தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், இந்திய ஆசிரியர் பயிற்றுனர்கள் மற்றும் இலங்கையின் தோட்டப் பிரதேசங்களில் உள்ள பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த 1000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்திற்காகக் கடந்த ஜூலை மாதம் 21 ஆம் திகதி 19 இந்திய ஆசிரியர்கள் இலங்கைக்கு வருகை தந்தனர்.

பாடத்திட்டங்களை மதிப்பாய்வு செய்தல், இலங்கையின் கல்வி முறைகள் மற்றும் கற்பித்தல் முறைகளைப் புரிந்துகொள்வது, பாடத்திட்டத்தில் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். (05)

# இத்தாலியப் பெண்ணின் கையை கடித்த குரங்கு

## உணவு கொடுத்தபோது சம்பவம்

வில்பத்து தேசிய வனத்தில் குரங்கு ஒன்று இத்தாலியப் பெண் ஒருவரின் கையை கடித்துக் காயப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இத்தாலியப் பெண் வில்பத்து தேசிய வனத்தில் விலங்குகளுக்கு உணவுக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது அங்கு இருந்த குரங்கு ஒன்று இவரது கையை கடித்து இவரது கையிலிருந்த வாழைப்பழத்தைப் பறித்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, காயமடைந்தவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# காணாமல்போன ரயில்வே ஊழியர் சடலமாக மீட்பு



காணாமல் போன ரயில்வே ஊழியரின் சடலம் மாளிகாவத்தை ரயில்வே பாதையிலுள்ள உள்ள கிணற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளார் என ரயில்வே திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவருடன் பணிபுரியும் ஏனையவர்கள் மேற்கொண்ட தேடுதலின் போது தெமட்டகொட ரயில் நிலையத்தில் உள்ள கிணறு ஒன்றிற்கு அருகில் அவரது என சந்தேகிக்கப்படும் பணப்பை, கையடக்க தொலைபேசி மற்றும் ஒரு ஜோடி காலணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் குறித்த நபரை தேடும் நடவடிக்கையில் ரயில்வே அதிகாரிகளும் பொலிஸாரும் போதிய தலையீடுகளை மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்து ரயில்வே ஊழியர்கள் 05ஆம் திகதி திங்கட்கிழமை காலை தமது கடமைகளை விட்டு வெளியேறியதையடுத்து ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சுஷ்மா சுவராஜ் வெளிநாட்டு சேவை நிறுவனத்தினால் விசேட பாடநெறி





சுஷ்மா சுவராஜ் வெளிநாட்டு சேவை நிறுவனத்தின் தலைவர் ஸ்ரீ சஞ்சீவ் ரஞ்சன் இலங்கையில் இராஜதந்திரிகள் மற்றும் அதிகாரிகளுக்கான முதலாவது விசேட பாடநெறியை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வு திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் 23 அதிகாரிகள் பங்கேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நாமலும் அவரது அரசியலும்

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் அரச தலைவர் வேட்பாளராக அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. நெலும் மாவத்தையில் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற பௌத்த சமய நிகழ்வின் பின்னர் கட்சியின் மூத்த தலைவர்கள், ஆதரவாளர்களின் பெரும் ஆரவாரங்களுக்கு மத்தியில் நாமலின் பெயர் அறிவிக்கப்பட்டது.

மகா சங்கத்தினரின் பிரித் ஓதினார்கள். அதன் பின்னர் கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகல காரியவசம் வேட்பாளராக நாமலின் பெயரை அறிவிக்கும் ஆவணத்தில் கையெழுத்திட்டு அதனை நாமலின் கைகளில் வழங்கினார். நாமலின் தந்தையும் முன்னாள் அரச தலைவருமான மகிந்த ராஜபக்ச, மற்றும் பெரியப்பாவும் முன்னாள் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்சவும் உடனடிருந்து ஆசிர்வதிக்க நாமலின் பெயர் அறிவிக்கப்பட்டது.

‘‘எமது கட்சியானது சகல காரணங்களையும் ஆராய்ந்ததன் பின்னர் வெற்றி வேட்பாளராக நாமல் ராஜபக்ச பெயரிடப்படுகின்றார் என்பதை உத்தியோக பூர்வமாக அறிவிக்கின்றேன்’’ என்றார் பொதுச் செயலாளர் சாகர.

‘‘நான் வேட்பாளராக களமிறங்குவதென்ற எவ்விதமான திட்டங்களும் ஆரம்பத்தில் இருந்திருக்கவில்லை. கட்சிக்குப் பொருத்தமான ஒருவருக்கு பொருத்தமான அங்கியைத் தயார் செய்வதுதான் எனக்கிருந்த பொறுப்பாகும்.

சவாலான காலப்பகுதியில்தான் கட்சியின் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும். கட்சி எனக்கு அளித்துள்ள பொறுப்பிற்கு அமைவாக தேசத்தினை வெற்றிகொள்வதற்கான பொறுப்பினை நிறைவேற்ற வேண்டும். வேறுசில காரணங்களுக்காக எம்மிடமிருந்து பிரிந்து சென்றவர்களுக்கு நாம் அழைப்பு விடுகின்றோம். அவர்கள் மீண்டும் எம்முடன் இணைந்து கொள்ள வேண்டும். இறுதியில் தேசமும் மக்களும் வெற்றிபெற வேண்டும்’’ என்று நிகழ்வில் உரையாற்றிய நாமல் தெரிவித்தார்.

இந்த அரசுத் தலைவர் தேர்தலில் மிக இளம் வயது வேட்பாளராக நிற்கக்கூடியவர் நாமல் ராஜபக்சவே. அவரது குடும்பத்தினர் மீது சுமத்தப்பட்டுள்ள கறைகளைத் துடைத்து கட்சியை தூக்கி நிறுத்தி அரசாட்சியை நோக்கி நடக்க அவருக்குப் பெரும் முயற்சி தேவை. அதற்கான நீண்ட கால அவகாசம் அவரிடம் இருக்கின்றது. அதில் அவர் கவனமாக முன்னேறவேண்டிய தேவை இருக்கின்றது.

அவர் சிங்கள மக்கள் மத்தியில் மட்டுமன்றி தமிழ் இளையோர் மத்தியிலிருந்தும் ஆதரவை எதிர்பார்க்கின்றார். அதில் தவறும் இல்லை. தனது தந்தை மற்றும் பெரியப்பா, சித்தப்பாவுடன் போரும் அதன் வடுக்களும் தொலைந்துபோகட்டும் இளையவர்களான நாம் புதிய பணத்தை புதிய வழியில் தொடங்குவோம் என்று அவர் சிந்திப்பது தவறாகாது. ஆனால், நீதிக்காகவும் நியாயத்திற்காகவும் ஏங்கித் தவித்து நிற்கும் தமிழ் இளையவர்கள் அப்படி நாமலைப் போல் தங்கள் எதிர்பார்ப்புக்களை இலகுவில் கடந்துவிட்டு நாமலின் பின்னால் அணிதிரள்வது சாத்தியப்படாது.

அதிலும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களைக்கூடத் தரமாட்டேன், அப்படி வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பேன் என்று நாமல் தனது தந்தையின் வழியில் விடாப்பிடியாக நிற்பாரானால் தமிழ் இளையோர் அவர் பின்னால் அணி திரள்வது சாத்தியமானதல்ல. அவர்கள் வலி சுமந்தவர்கள் அல்லர் என்றாலும் அவர்களுக்குத் தமது மூத்தோரின் வலியும் தமிழர் தம் உரிமைக் குரலும் நன்கு தெரியும். எனவே நாமல் தனக்கு கிடைத்துள்ள வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொண்டு இலங்கையை அனைத்து மக்களும் சமமாக, அமைதியாக வாழக்கூடியதாக மாற்றுவதற்கான அடித்தளத்தை இப்போதே இடவேண்டும்.

தனக்கான வெற்றி வாய்ப்புக்கள் அரிது என்பது நாமலுக்குத் தெரியாதது அல்ல. இருப்பினும் அவர் தனது நீண்ட அரசியல் பயணத்திற்கான வாய்ப்பையே இப்போது தொடக்கிவைத்துள்ளார். எனவே அந்தப் பயணம் அனைத்து மக்களுக்கும் சம வாய்ப்பையும் நீதியையும் உரிமைகளையும் வழங்குவதாக அமைவதற்கான அடித்தளத்தையும் அவர் இடவேண்டும். அடுத்தடுத்த தலைமுறைகளாவது பிணக்குகள், சிக்கல்கள் இன்றி வாழ்வதற்கு அது முக்கியமாகும். தமிழர் ஒருவர் பிரதமராக வேண்டும், அரசுத் தலைவராக வேண்டும் என்கிற முழக்கம் மட்டும் தீர்வு அல்ல என்பதை நாமல் புரிந்துகொள்ளவேண்டும். அப்படி நடக்கும் வாய்பை ஏற்படுத்துவதற்கான புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் சம வாய்ப்பும்தான் அவசியம் என்பதை அவர் உணர்ந்து அதற்கேற்பச் செயற்படவேண்டும். இந்தத் தேர்தலுக்காக குறுகிய இனவாதச் சகதிக்குள் மூழ்கிப் போய்விடாமல் இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டு அவரது பயணம் அமைவதே நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லது.

# பக்கவாதம் வந்த பிறகு என்ன செய்வது?



கு.கணேசன்

எனக்குத் தெரிந்த ஒருவருக்கு வயது 66. சென்ற மாதம் அவருக்குப் பக்கவாதம் வந்திருக்கிறது. நரம்புநல மருத்துவரிடம் சிகிச்சை பெற்று ஓரளவு குணமடைந்துவருகிறார். அவருக்கு வலது கை, கால்கள் செயலிழந்துவிட்டன. பேச்சு குழறுகிறது. தசைப் பயிற்சிகளை மேற்கொள்ளச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் உணவு விழுங்குவதில் சிரமம் இருக்கிறது. அவருக்கு ரத்தக்கொதிப்பும் நீரிழிவு நோயும் உண்டு. மாத்திரைகள் சாப்பிட்டுவருகிறார். அவருக்குப் புகைபிடிக்கும் வழக்கம் உண்டு. இப்போது மலச்சிக்கலும் உள்ளது மன உளைச்சலும் உள்ளது. இனிமேல், அவர் எந்த மாதிரியான தற்காப்பு முறைகளை மேற்கொள்ளவேண்டும் என்று என்னிடம் ஆலோசனை கேட்டார்.

இவரைப் போன்று இன்னும் பலர் பக்கவாதம் ஏற்பட்ட பின்னர் என்ன செய்வது என்ற கேள்வியுடன் இருப்பார்கள். ஆகவே, எல்லோருக்கும் பயன்படுகிற மாதிரி, அவருக்கு நான் சொன்ன ஆலோசனைகளையே இந்த வாரத்துக்குரிய விஷயமாக எடுத்துக்கொண்டேன்.

### இதோ நான் சொன்ன பதில்:

முதுமையில் மக்களை அதிகமாக ஊனமாக்கும் நோய், பக்கவாதம். இதன் பாதிப்பால் செயலிழந்த



கைகால்களை மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு மன உறுதி தேவை் தசைப்பயிற்சி உள்ளிட்ட தொடர் சிகிச்சைகள் தேவை. நோயாளிகள் நம்பிக்கையுடன் இந்தப் பயிற்சிகளைத் தொடர்ந்து செய்துவந்தால், நல்ல முன்னேற்றம் கிடைக்கும். ஆனால், யானை வாங்கிவிட்டு அங்குசம் வாங்க யோசிக்கிறவர்கள்தான் இங்கே அதிகம்.

மருத்துவமனையில் இருக்கிறவரை நோயாளியைக் கவனிக்கின்றனர். வீட்டுக்கு வந்தபிறகு இந்தப் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்ய யோசிக்கின்றனர். இதில்தான் தவறு செய்கின்றனர். பெரும்பாலானோர் அவற்றுக்கு வழிசெய்யாமலும், அருகிலிருந்து கவனிக்க வசதி செய்யாமலும் பாதிக்கப்பட்டவரைத் தனிமையில் விட்டுவிடுகின்றனர். அந்தத் தனிமையே அவர்களுக்குப் பெரும் தண்டனையாகிவிடுகிறது.

### தசைப் பயிற்சிகள் முக்கியம்!

மருத்துவமனையில் சிகிச்சை முடிந்த பிறகு, வீட்டில் தசைப் பயிற்சிகள் மேற்கொள்ள ஓர் இயன்முறை மருத்துவரை ஏற்பாடு செய்ய வேண்டும். தினமும் ஒரு மணி நேரம் இதற்கு ஒதுக்க வேண்டும். பக்கவாதம் வந்தவர்களுக்குப் படுக்கைப் புண்கள் வரவாய்ப்பிருக்கிறது. இதை முதலில் தவிர்க்க வேண்டும். அதற்குப் படுக்கை நிலையில் கவனம் செலுத்த வேண்டும். மெலிதான தலையணையைத் தலைக்கு அடியில் வைத்துக்கொள்ளலாம். முழங்கை வரையிலும் கைக்குத் தலையணை வைத்துக்கொள்ளலாம். தேவைப்பட்டால் காலுக்கும் தலையணை வைத்துக்கொள்ளலாம். தோள்களும் தலையணையில் இருக்க வேண்டும்.

### படுக்கைப் புண் வராமல் தடுக்க

ஒரே நிலையில் 2 மணி நேரத்துக்கு மேல் படுக்கக் கூடாது. படுக்கை விரிப்பைச் சுத்தமாகவும் சுருக்கங்கள் இல்லாமலும் வைத்துக்கொள்ள வேண்டும். மூன்று நாட்களுக்கு ஒருமுறை படுக்கை விரிப்புகளை மாற்றிவிட வேண்டும். ‘தண்ணீர்ப் படுக்கை’ (Water bed) நல்லது. சருமம் சிவப்பாகிறதா, சருமத்தில் புண் இருக்கிறதா எனத் தினமும் சோதித்துக்கொள்ள வேண்டும். எழுந்திருக்கும்போதும், உட்காரும்போதும், மற்றவர் உதவியுடன் மேற்கொள்வதே நல்லது. அல்லது படுக்கைக்கு அருகில் சுவரில் கைப்பிடிகளைப் பொருத்திக்கொண்டு, அவற்றைப் பிடித்து எழுந்து உட்காரலாம்.

தோள், முழங்கை, மணிக்கட்டு, விரல்கள், தொடை, முழங்கால், பாதங்கள் என வரிசையாக தசைப்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். முதலில் சில வாரங்களுக்கு இயன்முறை மருத்துவர் வீட்டிற்கே வந்து பயிற்சிகளை மேற்கொள்ள உதவலாம். அதன் பிறகு, நீங்களே அவற்றை மேற்கொள்ள முடியும். அல்லது வீட்டில் உள்ளவர்கள் இதற்கு உதவலாம்.

### ‘வாக்கர்’ உதவும்!

பக்கவாதம் வந்தவர்களுக்கு உடல் சமன்பாட்டில் பிரச்சினை ஏற்படுவது வழக்கம். உதாரணமாக, படுக்கையைவிட்டு எழுந்திருக்கும்போது, உடல் ஒரு திசையில் இழுப்பதுபோன்று இருக்கும். இந்த நிலைமையைத் தவிர்க்கவும் தனிப்பயிற்சிகள் உண்டு. இயன்முறை மருத்துவர் உதவியுடன் இவற்றையும் மேற்கொள்ள வேண்டும். தொடர்ந்து இந்தப் பயிற்சிகளை மேற்கொண்டு வந்தால், சில வாரங்களில் ‘வாக்கர்’ கொண்டு நடக்கப் பழகிவிடலாம்.

### பேச்சுப் பயிற்சி தேவை!

உணவை விழுங்குவதிலும் பேசுவதிலும் சிரமம் இருக்கிறது என்றால், இவற்றுக்கும் தனிப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இயன்முறை மருத்துவர் தொண்டை தசைகள் வலிமை பெற பயிற்சிகளைக் கற்றுக்கொடுப்பார். சாப்பிடும்போது உணவு புரையேறிவிடாமல் இருக்கவும் கவனம் செலுத்த வேண்டும். அதற்கேற்ப உணவுகளைத் தேர்வு செய்துகொள்ள வேண்டும். மெல்வதற்கு எளிதான உணவுகளை சிறிதளவில் அடிக்கடி உண்ணலாம். பேச்சு – மொழி பயிற்றுநர் சுலபமாக உணவை விழுங்க வழி சொல்லுவார். பேச்சு தொடர்பான பிரச்சினைகளுக்கும் பயிற்சிகள் தருவார்.

பயனாளிக்குச் சிறுநீர் போக ரப்பர் குழாய் பொருத்தியிருந்தால், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அதை மாற்றிவிட வேண்டும். இல்லையென்றால், தொற்று ஏற்பட்டு, குளிர் காய்ச்சல் வர வாய்ப்பிருக்கிறது. ரப்பர் குழாய் இல்லாமல் இருந்தால், சிறுநீர்க்கசிவு ஏற்பட வழி உண்டு. இதற்குப் பெரியவர்களுக்கான டயாபர் மற்றும் பேண்டி பேடுகளை அணிந்துகொள்ளலாம்.

### எளிய உணவுகள் முக்கியம்!

விழுங்குவதில் சிரமம் உள்ளவர்கள் உணவிலும் கவனம் செலுத்த வேண்டும். முழுத்தானியக் கஞ்சி, பருப்புக் குழம்பு, அரைக்கப்பட்ட காய்கறி, கறி, பழம், நசுக்கப்பட்ட கிழங்கு, அரைவேக்காடு முட்டை, பிரக்கோலி, முட்டைக்கோஸ், சோயாபீன்ஸ், அவரை, பச்சை தேநீர், இலையுள்ள காய்கறிகள், ஓட்ஸ், தயிர், கிரில் செய்த மீன், பாலாடைக்கட்டி ஆகியவை சிறந்த உணவுகள். இவற்றை அடிக்கடி சேர்த்துக்கொள்ளலாம்.

### மலச்சிக்கல் இருந்தால்?

மலச்சிக்கல் இருந்தால், நிறைய தண்ணீர் அருந்த வேண்டும். நார்ச்சத்துள்ள முழுத்தானியங்கள், சிறுதானியங்கள், காய், பழம் தினமும் சாப்பிடுங்கள். மலச்சிக்கலை லகுவாக்கும் மாத்திரைகளையும் பயன்படுத்தலாம். மலம் கழிப்பதற்கு பெட்பேன் அல்லது கழிப்பறை நாற்காலி பயன்படுத்துங்கள். சிறுநீர் மற்றும் மலம் கழிப்பதற்கு கழிப்பறைக்குச் செல்வதாக இருந்தால், சுவரில் கைப்பிடிகளைப் பொருத்திக்கொள்வது நல்லது.

### மனச்சோர்வை விரட்டுங்கள்

மூலிகை மருந்துகள் மற்றும் மூலிகை தேநீர் வேண்டாம். இவை நீங்கள் சாப்பிட்டுவரும் சில மருந்துகளைச் செயலிழக்கச் செய்ய வாய்ப்பிருக்கிறது.

(11ஆம் பக்கம் பார்க்க..)



# சிறுவர் உரிமை பாதுகாப்பு குறித்த திருகோணமலையில் செயலமர்வு

(எச். எம். ஹலால்தீன், ஹஸ்பர் ஏ.எச் )

திருகோணமலையில் மாவட்ட செயலகத்தில் சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான செயலமர்வு நேற்று (புதன்கிழமை) காலை நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலாளர் கெட்டியாராய்ச்சி தலைமையின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில், மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபர் சுதாகரன், திருகோணமலை மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மூஹ்மின் முஹம்மது சம்ஷித், பிரதேச செயலகங்களின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், வலயக் கல்வி அலுவலர்களின் சிறுவர் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது சிறுவர் உரிமை சிறுவர் பாதுகாப்பு, முதலான விடயங்கள் ஆராயப்பட்டன.

தேசிய ரீதியிலான கொள்கை ஒன்றை வகுத்து அதனை சிறுவர் பாதுகாப்புக்காக கொண்டு செல்லுதல், ஒவ்வொரு பிள்ளையையும் பாதுகாத்தல், எதிர்காலத்தில் சிறந்த பிரஜை ஒன்றை உருவாக்குதல் முதலான விடயங்கள் தொடர்பாக இந்தச் ஆராயப்பட்டன. (05)

# சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக மாணவ தூதர்களுக்கு செயலமர்வு



(வி.ரி. சகாதேவராஜா)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கமைவாக சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக மாணவர்களுக்கான மாணவத் தூதுவர் மாவட்ட ரீதியான தமிழ்மொழி மூலமான நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வானது உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வை அம்பாறை மாவட்ட உள சமுக உத்தியோகத்தர் யூ.எல்.அசாஉன் ஒருங்கிணைப்பு செய்திருந்தார் .

அம்பாறை, சம்மாந்துறை, காரைதீவு, அம்பாறை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இதன் போது காரைதீவு சம்மாந்துறை நிந்தவூர்.சாய்ந்தமருது ஆகியபிரதேசபாடசாலைமாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்குபற்றி மாணவ தூதுவர் நிகழ்வு தொடர்பான பயிற்சியை பெற்றுக் கொண்டனர். (05)

# ஊடகவியலாளர்களின் பிரச்சினையை செவிமடுக்கிறாராம் ஜனாதிபதி ரணில்

(எம் சியாஜ் )

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக சேவை செய்துவரும் ஊடகவியலாளர்களின் துறைசார் பிரச்சினைகளை நேரில் சந்தித்து கலந்துரையாடும் நோக்குடன் ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உதயமான கௌரவமான பங்களிப்பு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் செவ்வாய்க்கிழமை கொழும்பு ஊடக நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலக ஊடகவியலாளர்கள் மற்றும் நாட்டில் உள்ள பிரதேச ஊடகவியலாளர் என சகலரையும் ஒன்றிணைத்து பத்தரமுல்ல வோட்டர் ஏட்ஜ் நட்சத்திர ஹோட்டலில் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளை பற்றியும் தேவைப்பாடுகள் பற்றியும் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கைத்தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார ஆகியோர் உரையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சமூக நலனிலும் மொழி வளர்ச்சிக்கும் எழுத்தாளர்கள் பங்களிப்பு அவசியம்

## பிரிஸ்பேர்ன் நூல் வெளியீட்டில் தாமரைச் செல்வி உரை







பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஒமாணி நூலக மண்டபத்தில் ஒகஸ்ட் நாலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஜங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்களின் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் 'தாமரைச் செல்வி' திருமதி ரதிதேவி கந்தசாமி ஆற்றினார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் சிறப்புற பாடினர்.

சமூகப் பார்வையுள்ள எழுத்தாளர்களை தமிழ் உலகம் உத்வேகப்படுத்த வேண்டும். சமூக நலனிலும் மொழி வளர்ச்சிக்கும் எழுத்தாளர்கள் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும். இதன் மூலமே நல்லதோர் எதிர்கால சந்தியினரை உருவாக்க முடியும் என எழுத்தாளர் தாமரைச்செல்வி குறிப்பிட்டார்.

வன்னிமண்ணின் மணம் கமழும் பெண் ஆளுமையான எழுத்தாளர் தாமரைச்செல்வி ஐம்பது ஆண்டுகால எழுத்தூழியப் பணியில் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். இந்நிகழ்வில் அவர் உரையாற்றுகையில் ஓர் எழுத்தாளனின் வாழ்வியல் வெற்றியானது அவனது எழுத்தை எதிர்கால சந்ததியிரும் அறிந்து உணர்ந்து படிப்பதிலேயே தங்கியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

யுத்தகால வன்னியின் வரிகளை யதார்த்த பூர்வமாக எழுத்துருவில் வடித்த 'தாமரைச்செல்வி' ஈழத்தின் பெண் எழுத்தாளர்களுள் முதன்மையான ஒருவர். 1973 முதல் சிறுகதைகளையும் பல புதினங்களையும் எழுதிவரும் தாமரைச்செல்வி ஒன்பது நூல்களை வெளியிட்டுள்ளார். இவருக்கு இலங்கையின் தேசிய சாகித்திய விருதும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் 2023 வருடாந்த தமிழ் எழுத்தாளர் விழாவில்

இலக்கியப் படைப்பாளி தாமரைச் செல்வியின் ஐம்பது ஆண்டுகால எழுத்தூழியப் பங்களிப்பை பாராட்டி வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பதும் அறிந்ததே.

இந்நிகழ்வின் தலைமையுரையை ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் செந்தில்குமரன் ஆற்றினார். பின்னர் பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை இலக்கிய ஆர்வலர் சிவா கைலாசம் நிகழ்த்தினார்.

பாலஸ்தீன மண்ணில் நிகழும் கொடூரத்தை உலகம் கண்மூடி பார்த்துக் கொண்டிருக்கிறது. உலகின் வல்லரசு சக்திகளின் கோரப்பிடிக்குள் அப்பாவி பாலஸ்தீன மக்கள் அல்லப்பட்டு மடிகுன்றனர் என சிவா கைலாசம் பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை இலக்கிய ஆர்வலர் சிவாகைலாசம் நிகழ்த்தினார்.

அதேவேளை இத்தகைய கொடூர வரலாற்றுகளை தமிழில் வெளியிட்டமை போல் ஆங்கிலத்திலும் இத்தகைய நூல்கள் வெளிவர வேண்டும் என சிவா கைலாசம் உரை நிகழ்த்தினார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டாக்டர் துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றினார்.

இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை ரஜினிகாந்த் ஜெயராமன் தமிழக இலக்கிய ஆர்வலராக இருப்பினும், ஈழத்து ஊடகவியலைப் பற்றி சிறப்புற உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வை பிரிஸ்பேர்ன் சுதா சிறப்புற தொகுத்து அளித்தார்.

ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் நடைபெற்ற இந்நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கில் பெருந்திரளான பிரிஸ்பேர்ன் வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில்

ஏற்புரையை நூலாசிரியர் ஜங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார். (05)




# மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் மாணவர்களின் சந்தை

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரியின் ஆரம்பப் பிரிவு தரம்-03 மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மாதிரி சந்தை நிகழ்வு பாடசாலை வளாகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அதிபர் எம்.ஐ.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் இம்மாணவர் சந்தை வெகு விமரிசையாக இடம்பெற்றது.

மாணவர்களின் கணித மற்றும் தமிழ் அறிவை மேம்படுத்துவதுடன், சமூக தொடர்பாடல் விருத்தி, வியாபார நடைமுறைகள், சுகாதார பழக்க வழக்கங்கள், நட்புறவுச் செயற்பாடுகள், அன்றாட வாழ்க்கைத் தேவையான விடயங்களை முன்னுரிமை அடிப்படையில் அணுகுதல் போன்ற பல்வேறு விடயங்கள் இதன்மூலம் மாணவர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டன.

இதன் போது மாணவச்சிறுவர்கள் மகிழ்வுடன் தமது விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், பாடசாலையின் ஏனைய மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து இச்சந்தையில் பல்வேறு பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.

மேற்படி மாதிரி சந்தை செயற்பாடானது மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் செயற்பாடாய் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# வர்த்தகர் ஏறாவூரில் கொலை



(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிச்நகர் – ஹிஸ்புல்லாஹ் நகரில் வர்த்தகர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு அவரது வர்த்தக நிலையத்தில் வைத்து இடம்பெற்றுள்ளது. போதைப்பொருள் பாவனையாளர்கள் வர்த்தக நிலையத்தை கொள்ளையடிக்க வந்த நிலையில் அதனை கடை உரிமையாளர் தடுத்த போது இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவத்தில் திருமணம் முடிக்காத நிலையில் சில்லறைக் கடை நடத்தி வந்த 45 வயதுடைய தாவூத் எண்பவர் தலைப் பகுதியில் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த கொலைச் சம்பவத்தில் தொடர்புடைய நபர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ள ஏறாவூர் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குப்பட்ட கழகங்களுக்கிடையான விளையாட்டு விழா








கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குப்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுவிழா சிறப்புற இடம்பெற்றிருந்தது.

கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தனின் தலைமையில் ஆரம்பமான இந்த விளையாட்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனும் கௌரவ விருந்தினர்களாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம். ஆர்.மோகனதாஸ், மாவட்ட மேசைபந்தாட்ட பயிற்றுனர் ச.குமாரும் கிளிநொச்சி மக்கள் அமைப்பின் சார்பில் விளையாட்டு இணைப்பாளர் கலாதரன் ஆகியோரும் அதிதிகளாகக் கலந்துசிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சகர், கண்டாவளை பிரதேச செயலர், மாவட்ட புள்ளிவிவரவியலாளர்,உதவிமாவட்ட செயலர், மாகாண விவசாயப்பணிப்பாளர்,மாவட்ட விளையாட்டு பயிற்றுனர்கள்,விளையாட்டுக்கழகங்களின் அங்கத்தவர்கள்,போட்டியாளர்கள்,

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,விளையாட்டு ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05-113)



## தமிழ் பொது வேப்பாளர் விவகாரம் நேரத்தை வீணடிக்கும் செயற்பாடு

### பிள்ளையானும் கருத்துச் சொல்கிறார

வடக்கு, கிழக்கில் நடைமுறை சாத்தியமற்ற தீர்மானங்களுக்காக சில தலைவர்கள் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் பொது வேட்பாளர் விவகாரமும் அவ்வாறு நேரத்தை வீணடிக்கும் செயற்பாடே. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது தமிழ் மக்களின் நம்பிக்கை மேலெழுந்துள்ளதாக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுறை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டிய நிலைமையில் தான் இன்று தமிழரசு கட்சி காணப்படுகிறது. ஒரு சிலர் வடக்கு, கிழக்கில் பொது வேட்பாளர் களமிறக்கப்பட வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கின்றார்கள். சில தலைவர்கள் அவர்களது சித்தாந்தத்தின் அடிப்படையில் நாட்டை குழப்பும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் நடைமுறை சாத்தியமற்ற, மீண்டும் மீண்டும் மக்கள் தோல்வியடையக் கூடிய சிந்தனைகளில் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, அவர்களது எண்ணங்கள் சாத்தியமற்றவை. ஆனால் மக்கள் சிறந்த தீர்மானத்தை எடுக்கக் கூடிய புத்திசாலிகளாகவே இருக்கின்றனர்.

நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு அதிகார பரவலாக்கலிலும் அவதானம் செலுத்தக் கூடிய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. அவருக்கும் ஒரு கடமை இருக்கிறது. கடந்த காலங்களில் தான் வகித்த வகிபாகம், 13ஆவது திருத்தத்தின் வெற்றி, தோல்வி, விடுதலைப்புலிகளுடனான உடன்படிக்கைகள் உள்ளிட்டவற்றில் அவரும் பங்கேற்றுள்ளார்.

தேர்தலின் பின்னர் தன்னால் முடிந்த வரை மாற்றங்களை ஏற்படுத்துவதாகக் கூறியுள்ளார். அவர் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அதுவே அவர் இந்த நாட்டுக்கு ஆற்றக் கூடிய மிகப் பாரிய பணியாக இருக்கும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனை செய்யக் கூடிய வாய்ப்பிருந்த போதிலும், கடும்போக்குவாதிகள் அதற்கு இடமளிக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவற்றை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் மேலெழுந்திருக்கின்றது. அவ்வாறு அவர் செய்யும் பட்சத்தில் உலகலாவிய பிரபல்யமடைந்த தலைவராக அவர் உருவாகக் கூடிய வாய்ப்புக்கள் கூட இருக்கின்றன. - என்றார் .(05)

---

## நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் தகராறு கத்திக்குத்துக்கு இலக்காகிய ஒருவர் காயம்

நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் பணிபுரியும் இரு ஊழியர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கேக் துண்டுக்காக இந்த இரு ஊழியர்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ள நிலையில் ஓர் ஊழியர் மற்றைய ஊழியரை கத்தியால் குத்தி காயப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற பாதுகாப்பு பிரிவினர் ஆகியோர் இணைந்து இந்த இரு ஊழியர்களையும் சமரசம் செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# அக்கராயனில் பரசூட் முறையிலான நெற்செய்கை வயலில் அறுவடை





கிளிநொச்சி அக்கராயன்குளம் விவசாய போதனாசிரியர் பிரிவில் அக்கராயன் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையில் நவீன முறையான பரசூட் முறையிலான நெல் விதைப்பில் ஈடுபட்ட விவசாயி ஒருவரின் வயலில் அறுவடை விழா நேற்று(புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு பிற்பகல் நடைபெற்றது.

அக்கராஜன்குளம் பாடவிதான உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாட விதான மற்றும் விவசாயப் போதனாசிரியர்களால் வருகை தந்த விவசாயிகளுக்கும், பிரமுகர்களுக்கும் பரசூட் முறையிலான நெல் நெற்கை முறைபற்றி விரிவான விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் பணிமனை பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் வழிகாட்டலின் கீழ், மாவட்டத்தின் பல இடங்களிலும் இவ்வாறான முன்மாதிரி துண்டச்செய்கைகள் செய்கை பண்ணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05 - 316)

# மருதமுனை நூறானியா மத்ரஸா ஆண்டு நிறைவும் பரிசளிப்பும்





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை நூறானியா மஸ்ஜிதில் இயங்கி வரும் மத்ரஸா மாணவர்களுடைய ஆண்டு நிறைவு மற்றும் பரிசளிப்பு நிகழ்வு

என்பன மஸ்ஜிதின் தலைவர் எஸ்.எல். நஜ்முர் ரஹ்மான் தலைமையில் மஸ்ஜிதில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எஸ். நவாஸ் ஹாரிஸ் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையில் -

அரசியல் ஊடாக இலாபம் அடைய வேண்டும் அல்லது உழைத்து சொத்துக்களை தேட வேண்டும் என்பதற்காக அரசியலுக்கு வந்தவன் நான் அல்லன். நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னரே சமூக சேவைகளை செய்து வந்திருக்கிறேன். மத்ரஸா மானவர்களின் மத்ரஸா கல்வியை ஊக்கப்படுத்துவதற்கு நாம் எல்லோரும் முன்னின்று செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா சபை தலைவர் அஷ்செய்க் எப்.எம். அஹமது அன்சார் மௌலானா, அன் நஹ்லா அரபுக் கல்லூரி விரிவுரையாளர் பர்ஸான் (நஹ்ஜி), நூறானியா மஸ்ஜித் நம்பிக்கையாளர் சபை செயலாளர் எம். அஹமட் முபீத் உட்பட மாணவர்களின் பெற்றோர்கள், அபிமானிகள், குர்ஆன் மத்ரஸாவின் முஅல்லிமா உட்பட பலர் கலந்துகொண்டனர். (05)

# கொழும்புத்துறையில் கசிப்பு காய்ச்சி விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைது



யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை பகுதியில் கசிப்பு காய்ச்சி விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றதடுப்பு பிரிவு பொலிஸாரால் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞன் கைது செய்யப்பட்டார்.

இதன்போது 227 போத்தல் கோடாவும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

குறித்த சந்தேக நபர் கொழும்புத்துறையிலும் வட்டுக்கோட்டையிலும் வீடுகளை வாடகைக்கு எடுத்து கசிப்பு காய்ச்சி பல இடங்களில் விற்பனையில் ஈடுபட்டாரென பொலிஸார் தெரிவித்தனர். (05)

# மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய கன்னி ஆடிப்பூரம்





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றில் முதல் தடவையாக நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர திருவிழா நேற்று (புதன்கிழமை) மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் ஆலய குரு சிவஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா தலைமையில் ஆடிப்பூரத் திருவிழா நடைபெற்றது.

ஆலய பரிவான சபை தலைவர் கலாநிதி கே.ஜெயசிறில் தெரிவிக்கையில் அம்மனுக்கு உரிய இந் நன்நாளில் எமது ஆலயத்தில் முதல் தடவையாக ஆடிப்பூரம் அனுஷ்டிக்க பட்டுள்ளது. ஏராளமான பக்தர்கள் கலந்து சிறப்பித்தனர் என்று தெரிவித்தார் .

விசேடமாக ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள், ஆலய பரிபாலன சபை ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் ஆடிப்பூரம் பற்றிய சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார்கள்.

இதேவேளை. இன்று (வியாழக்கிழமை) நாக சதுர்த்தி விசேட பூஜையும் அங்கு இடம்பெற இருக கின்றது.

அத் தருணம் கொக்கு மந்தாரை நீல காக்கணம்பூ, பால் போன்ற நைவேத்தியங்களை கொண்டு வருமாறு பக்தர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள் என்று ஆலயபரிபாலனசபையின் செயலாளர் த.சண்முகநாதன் தெரிவித்தார்.(05)

# சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் தலைவர் இங்கிலாந்திலிருந்து வருகை





(பி.கேதீஸ்)

இங்கிலாந்திலிருந்து வருகைத் தந்த சங்கராஜிநினைவு அறக்கட்டளையின் தலைவர் நேசன் சங்கராஜியுடன் சங்கராஜிநினைவு அறக்கட்டளையின் செயலாளர் ஏ.கமலாநந்தன்,அதன் மத்திய மாகாண இணைப்பாளர்களான ராஜ்குமார்,ஆமஸ்ரோங் ஆகியோர் செவ்வாய்க்கிழம தலவாக்கலை கிறேட் வெஸ்டன் பாடசாலைக்கு விஜயம் செய்தனர்.

இதன் போது பாடசாலையில் நிலவும் குறைபாடுகளை கவனத்தில் கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர்கள் அங்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# பளை மத்திய கல்லூரியில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு இடம்பெற்ற மருத்துவ முகாம்

*பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)யில் நேற்று (புதன்கிழமை) காலை 10 மணியளவில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மருத்துவ முகாம் ஒன்று இடம்பெற்றது.*

*இந்த நிகழ்வு பளை மத்திய கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றிருந்தது.*

*பளை மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களின் உடல் நிலையை ஆராய்வற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*

*இந்த மருத்துவ முகாமிற்கு வைத்தியர் அருமைத்துரை மற்றும் நிதி பங்காளர் நலன் விரும்பி அன்பு மற்றும் ஆசிரியர் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (05 – 113)*

காலைக்கதிர் Kalaikkathir

# வங்கிக் கணக்கில் 65 லட்சம் ரூபா கையாடல் கைதானவர்களுக்கு 20 வரை விளக்க மறியல்

வங்கிக்கணக்கில் இருந்த 65 லட்சம் ரூபாவை கையாடல் செய்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் இருவர் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டதையடுத்து, நீதிவானின் உத்தரவுக்கமைய எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பண மோசடி தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது -

வங்கிக்கணக்கில் இருந்த 65 லட்சம் ரூபாவை கையாடல் செய்யப்பட்டதாக, பணத்தை இழந்தவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, விசாரணைகளின் அடிப்படையில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'ஆலோசனைக் கட்டணங்கள் தவிர வேறு எந்தக் கட்டணமும் இன்றி வெளிநாட்டுக்கு அனுப்பப்படும்' என்று சமூக வலைத்தளத்தில் பதிவிடப்பட்ட விளம்பரத்தை பார்த்து யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த ஒருவர் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த உள்நாட்டு மற்றும் பிரிட்டன் தொலைபேசி எண்களுக்குத் தொடர்புகொண்டுள்ளார்.

அந்தத் தொலைபேசி அழைப்பில் பேசியவர்கள், வங்கிக்கணக்கில் ஒரு தொகைப் பணத்தை வைப்பிலிட வேண்டும் என்றும், சில ஆவணங்களைத் தங்களுக்கு அனுப்ப வேண்டும் என்றும் அந்த நபரிடம் தெரிவித்துள்ளனர்.

தொலைபேசியில் பேசியவர்களின் கதையை நம்பி, தனது கடவுச்சீட்டு பிரதி, அடையாள அட்டைப் பிரதி உட்பட பல ஆவணங்களை குறிப்பிட்ட கொழும்பு விலாசமொன்றுக்கு அனுப்பியுள்ளார். அவர்கள் குறிப்பிட்ட ஒரு தொகையை வங்கிக்கணக்கில் வைப்பிலிட்டு, வங்கிச் செயலியில் கணக்கு மீதி விவரங்களை புகைப்பட வடிவில் அனுப்பியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த 27ஆம் திகதி குருநகரைச் சேர்ந்தவரது கைபேசி இலக்கம் செயலிழந்துள்ளது.

சில நாள்களின் பின்னர் வங்கிக்குச் சென்று தனது கணக்கு மீதியைச் சரிபார்த்தபோது, அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வங்கிக்கணக்கிலிருந்த 65 லட்சம் ரூபாவும் காணாமல் போயிருந்த நிலையில், யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் அவர் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான பொலிஸ் குழு இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்தது.

விசாரணைகளின் அடிப்படையில் பெண் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணை நடத்தியதையடுத்து அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகின.

குருநகரைச் சேர்ந்த நபரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களைக் கொண்டும், அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டும் லாவகமான முறையில் வங்கிக்கணக்கில் இருந்த பணம் வேறொரு வங்கிக்கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குருநகரைச் சேர்ந்தவரின் கைபேசி இலக்கத்தைச் செயலிழக்கச் செய்து, அவரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களைக் கொண்டு ஈ-சிம் ஒன்று சந்தேக நபர்களால் பெறப்பட்டுள்ளது.

தற்போது கைது செய்யப்பட்ட பெண்ணே கைபேசி நிறுவனத்துக்குச் சென்று உரையாடி, அந்த இலக்கத்துக்குரியவர் தற்போது தாய்லாந்தில் உள்ளார் என்று தெரிவித்து, தாய்லாந்து தொலைபேசி இலக்கத்தில் ஒருவரை உரையாட வைத்து ஈ-சிம்மை பெற்றுள்ளார். அதனால் பணப்பரிமாற்றம் தொடர்பான குறுந்தகவல்கள் உரியவருக்குக் கிடைப்பது தடுக்கப்பட்டுள்ளது.

தாம் சேகரித்த ஆவணங்கள், தகவல்கள் என்பவற்றைக் கொண்டு, குருநகரைச் சேர்ந்தவரின் வங்கிக் கணக்குக்குள் செயலி ஊடாக நுழைந்த சந்தேக நபர்களில் தற்போது கைது செய்யப்பட்ட பெண்ணின் வங்கிக்கணக்குக்கே முதலில் பணம் மாற்றப்பட்டுள்ளது.



அதன் பின்னர் மற்றவரின் வங்கிக்கணக்குக்கு பணம் மாற்றப்பட்டுள்ளது. அந்த நபர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் ஐ.டி. துறையில் பணியாற்றுபவர் என கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டதையடுத்து, நீதிவானின் உத்தரவுக்கமைய எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# மொரட்டுவை கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

மொரட்டுவை, முரவத்த பிரதேசத்திலுள்ள கடற்கரை பகுதியில் நேற்று(புதன்கிழமை) ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மொரட்டுவை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய நபரொருவராவார்.

சடலமாக மீட்கப்பட்டவர் செவ்வாய்கிழமை இரத்மலானை ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள கடற்கரை பகுதியில் நீராடிக் கொண்டிருக்கும் போது நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. சடலமானது பிரேத பரிசோதனைக்காக களுபோவிலவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# யாழ் . மறைமாவட்ட குரு முதல்வரை சந்தித்தார் வேட்பாளர் விஜயதாஸ



ஜனாதிபதி வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெயரட்ணம் அடிகளாரை, விஜயதாச ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்த சந்திப்பு நேற்று மதியம் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# 4 கிலோ தங்கம் கடற்படையால் கல்பிட்டிக் கடற் பரப்பில் மீட்பு

கல்பிட்டி தோராயடி கடற்பரப்பில் 04 கிலோ 740 கிராம் நிறையுடைய தங்கம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வடமேற்கு கடற்படை அதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடத்தல்காரர்களால் இந்த தங்கம் இங்கு கொண்டு வந்திருக்கலாம் என கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்.

குறித்த தங்கத்தை கொண்டு வந்ததாக சந்தேகிக்கப்படும் டிங்கி படகு ஒன்றும் தோராயடி கடற்பரப்பில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட தங்கம் மற்றும் படகு சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் மேலும் தெரிவித்தனர். (05)

# மின், எரிபொருள் சேவை அத்தியாவசிய தேவை

## வர்த்தமானி வெளியீடு

மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைவாக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியாகியுள்ளது.

மின் விநியோகம், பெற்றோலிய உற்பத்தி, எரிபொருள் விநியோகம் ஆகியன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வர்த்தமானிக்கு அமைவாக எந்தவொரு அரச கூட்டுத்தாபனம், அரச திணைக்களம், உள்ளூராட்சி மன்றம், கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளை மூலம் வழங்கப்படும் சேவைகள் சாதாரண மக்களின் அன்றாட வாழ்விற்கான அத்தியாவசிய சேவைகள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரு திருடனும் எனக்கு வாக்களிக்க முடியும்

## ஜனாதிபதி ரணில் ஊடக பிரதானிகளிடம் தெரிவிப்பு

ஒரு திருடனும் எனக்கு வாக்களிக்க முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தனியார் விடுதியில் நேற்றையதினம் ஊடகப் பிரதானிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் எனக்காகவே வாக்களிக்கின்றனர். பொதுத் தேர்தல் நடைபெறும் போது மக்கள் தனிநபர்களை அடையாளம் கண்டு வாக்களிப்பார்கள். எனக்கு அனைவரும் வாக்களிப்பார்கள். திருட்டுக்குற்றச்சாட்டில் சிறைக்குச் சென்றவரும் கூட எனக்கு வாக்களிப்பார்.

நான் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வழக்கு விசாரணையில் என்றுமே தலையிட்டதில்லை. எதிர்வரும் காலத்திலும் தலையிடப்போவதில்லை. நான் அரசியல் தலைவர்களை பாதுகாப்பதற்குச் செல்லவில்லை.

அரசியல் ரீதியாக பல்வேறுபட்ட குழுக்களுடன் செயற்படுகின்றோம். அவர்கள் நல்லவர்களா இல்லை திருடர்களா என்பதை சட்டமே தீர்மானிக்க வேண்டும். நான் பிரதமராக இருந்தபோது எத்தனையோ அரசியல்வாதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நான் எவரையும் பாதுகாப்பதற்கு செல்லவில்லை. இறுதித் தீர்மானம் நீதிமன்றத்தில் உள்ளது.

தற்போதுகூட அமைச்சர் ஒருவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குவிசாரணை இடம்பெறுகின்றது. நான் அதனை எங்காவது நிறுத்துமாறு கூறினேனா? தலையீடுகளைச் செய்தேனா? எந்தவொரு நாட்டிலும் எவருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்கள் காணப்பட்டால் அதற்கு எதிராக சட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டி எவ்வாறு இருக்கும் என்று எனக்குத் தெரியாது. நான் போராடுவதற்கு வரவில்லை. இந்தக் கொள்கையை நாட்டில் தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டுமாக இருந்தால் அதற்காக மக்களின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவே முயற்சிக்கின்றேன்.

தேவையென்றால் மக்கள் அதற்கு வாக்களிக்க முடியும். நான் மற்றவர்கள் கூறும் விடயத்திற்கு பதிலளிக்கப் போவதில்லை. அதில் எனக்கு எவ்விதமான பயனுமில்லை. ஜனாதிபதி என்ற இந்தப் பதவிக்கு வருவதற்கு நமாலும் எனக்கு வாக்களித்தார். அதற்காக நான் அவருக்கு நன்றி கூறுகின்றேன். இரண்டு வருடங்களும் நாம் ஒன்றாகப் பணியாற்றுவோம் என்று கூறினோம். தற்போது அந்த இரண்டு வருடங்களும் நிறைவுக்கு வந்துவிட்டன.

அந்தவகையில் அவருடைய கட்சிசார்ந்து முடிவெடுக்கும் உரிமை அவருக்கு உள்ளது. எனக்கு ஆதரவளிப்பதாக இருந்தால் ஆதரவு அளிக்க முடியும். அவர் போட்டியிடுவதாக இருந்தால் அவர் போட்டியிடலாம். தற்போதைய நிலையில் நாட்டு மக்களிடத்தில் எமது கொள்கைகளை தெளிவுபடுத்த வேண்டிய விடயமே உள்ளது அதனை நாமும் முன்னெடுப்போம் என்றார்.

# கடன் சலுகை மீளாய்வு தேர்தலுக்குப் பின்னர்


இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன் சலுகையின் மூன்றாவது மீளாய்வு ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் நடைபெறுமென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். இதனை முன்னிட்டு அதிகாரிகள் குழுவொன்று நாட்டிற்கு வருகை தரவுள்ளதாக அவர் கூறினார்.

சர்வதேசநாணயநிதிய(ஐஎம்எப்) தூதுக்குழுவின் சிரேஷ்ட தலைவர் பீட்டர் புஷரூவர் உள்ளிட்ட குழுவினர் அண்மையில் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் அவர்கள் கலந்துரையாடியதுடன், இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு திட்டம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர் கடன் சலுகை 3 தவணைகளில் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பக்கவாதம் ......



பக்கவாதம் ஏற்பட்டவர்களுக்கு முக்கியப் பிரச்சினை மனச்சோர்வாகத்தான் இருக்கிறது. குளிப்பது, உடை உடுத்துவது, உணவு உண்பது போன்ற அன்றாடத் தேவைகளுக்குக்கூட மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டியதிருக்கிறதே என்று நினைத்து வருத்தம் ஏற்படுவது இயல்புதான்.

இதையும் கடந்துவிடலாம். 'நான் மறுபடியும் நடக்க ஆரம்பித்துவிடுவேன்' என்று மன உறுதிகொள்ள வேண்டும். தினமும் தியானம் செய்வது மன உளைச்சலைக் குறைக்க உதவும். நண்பர்களுடன் அடிக்கடி பேசுங்கள். இசை கேளுங்கள். புத்தகம் படியுங்கள். முடிந்த பொழுதுபோக்குக் கலைகளில் ஈடுபட வேண்டியதும் முக்கியம்.

**மீண்டும் பக்கவாதம் ஏற்படாமல் இருக்க வழிகள்:**

குருதி அழுத்தம், ரத்தச் சர்க்கரை மற்றும் கொலஸ்டிரால் அளவுகளைக் கட்டுப்படுத்துங்கள்.

மருத்துவர் கூறும் மருந்துகளைத் தொடர்ந்து சாப்பிடுங்கள். சுயமாக, அவற்றை நிறுத்துவதோ, குறைப்பதோ கூடாது. புகைபிடிக்க வேண்டாம். மது அருந்த வேண்டாம். உப்பு, இனிப்பு, கொழுப்பு குறைந்த உணவுகளையே சாப்பிடுங்கள்.

உடல் எடையைச் சீராக வைத்துக்கொள்ளுங்கள்.

நம்பிக்கை தரும் நவீன சிகிச்சை!

பக்கவாதம் ஏற்பட்டவர்களுக்கு நம்பிக்கை தரும் நவீன சிகிச்சையாக தற்போது வந்திருக்கிறது, 'ஸ்டென்ட் மீள் சிகிச்சை' (Stent retriever therapy). 'ஸ்டென்ட்' என்பது பால்பாயிண்ட் பேனாவில் இருக்கும் ஸ்பிரிங் மாதிரியான சிறிய வலைச்சுருள். மூளையில் ரத்தக்குழாய் அடைப்பு மிகவும் கடுமையாக இருந்தால், அதை மருந்துகளால் மட்டும் கரைக்க முடியாது. அப்போது 'ஸ்டென்ட் சிகிச்சை' தோள் கொடுக்கிறது.

நோயாளியின் தொடையில் இருக்கும் ரத்தக்குழாய் வழியாக ஒரு வளைகுழாய் இணைந்த 'ஸ்டென்ட்'டை மூளைக்கு அனுப்பி, அடைப்புள்ள இடத்தை அடைந்ததும் ஸ்டென்டை விரியச்செய்து, ரத்தக்கட்டியைக் கவ்வி எடுத்து, ஸ்டென்டை உறுவிவிடுகிறார்கள். இதனால் அங்கே ரத்த ஓட்டம் மீள்கிறது. மூளையின் செல்கள் புத்துயிர் பெற, பாதிக்கப்பட்ட கை, கால்கள் முன்புபோல் இயங்குகின்றன.

பக்கவாதம் வந்த 6 மணி நேரத்துக்குள் இதைச் செய்துவிட வேண்டும். அப்போதுதான் பலன் கிடைக்கும். ஆனாலும், மூளையில் ரத்தக்கசிவால் பக்கவாதம் வந்தவர்களுக்கு இந்தச் சிகிச்சை பலன் தராது என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாரா: 08.08.2024 இல் வெளியிடப்பெற்றது.